Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 250

வியாழக்கிழமை 03 ஓகஸ்ட் 2023

ஆடி 18 ஆம் நாள்



# அரசியல் தீர்வு விவகாரத்தில்; விரைவில் மாற்றம் ஏற்படும்!!!

## ரணிலின் சர்வகட்சி கூட்டத்தின் பின்னர் மோடிக்கு சம்பந்தன் மீண்டும் கடிதம்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 3

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணத்தின் பின்னர் நடத்திய சர்வகட்சி கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்களின் அடிப்படையிலும் அரசியல் தீர்வு விவகாரத்தில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைமை தொடர்பிலும் அதில் மாற்றம் தேவை என்ற அடிப்படையிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் வெளிவிவகார செயலர் ஜெய்சங்கர் ஆகியோருக்கு எழுதிய கடிதம் நேற்று அவர்களிடம் சேர்ப்பிக்கப்பட்டுள்ளதை இந்தியத் தூதரக அதிகாரிகள் என்னிடம் உறுதிப்படுத்தினர் – இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். »11



### இந்திய இராணுவம் புரிந்த வல்வைப் படுகொலை; நினைவேந்தல் நேற்று!

யாழ்ப்பாணம், ஓக. 3
வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவத் தினரால் மேற்கொள்ளப்பட்ட 'வல்வைப் படுகொலை' 34ஆவது ஆண்டு நினை »11

### விவசாயமா? மின்சாரமா? அமைச்சரவையில் ஆராய்வு

கொழும்பு, ஓக. 3
விவசாயத்துக்கு நீரை விடுவிப்பதன் மூலம் மின் உற்பத்தி வீழ்ச்சி அடையும் அபாயம் காணப்படுவதாகவும் இரண்டு விடயங்களையும் பாதிக்காத வகையில் தீர்ப்பது தொடர்பில் »09

### பறாளாய் ஆலயத்தையும் ஆக்கிரமிக்க முயற்சியா?

சங்கமித்தை நட்ட மரம் உள்ளதாக தொல்பொருள் திணைக்களத்தால் வர்த்தமானி

யாழ்ப்பாணம், ஓக. 3
சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயத்தில் உள்ள அரச மரத்தை சங்கமித்தை வந்து இறங்கிய பின்னர் அவருடன் தொடர்புபட்ட மரமாகச் »11



### தர்மபுரத்தில் தென்னம் தோப்பு முற்றாக எரிந்து சாம்பரானது!!

கிளிநொச்சி, ஓக. 3
திடீரென ஏற்பட்ட தீப் பரவலை அடுத்து தர்மபுரம் பகுதியில் உள்ள தென்னம் தோப்பு »11

காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையிலிருந்து

### இரும்பைத் திருடுவது பிரதேசவாசிகளாம்!

இராணுவக் குறைப்பாலேயே இந்த நிலை என்கிறார் கூட்டுத்தாபனத் தலைவர்

கொழும்பு, ஓக. 3
கடந்த இரண்டு மாதங்களில் காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வளாகத்தில் இருந்த சுமார் 120 மில்லியன் ரூபா பெறுமதியான இரும்பு திருடப்பட்டுள்ளதாக இலங்கைசிமெந்துக்கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜகத் தர்மப்பிரிய »11

போலி விசாவால்

### யாழ். தம்பதி கைது!

கொழும்பு, ஓக. 3
போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இத்தாலிக்குச் செல்ல முயன்ற இளம் தம்பதியர் இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் »11

பருத்தித்துறை – மன்னார் – முல்லைத்தீவு

### இலங்கையில் இரண்டாவது தெங்கு முக்கோண வலயம்

செப். 2ஆம் திகதி தொடக்கி வைப்பு

கொழும்பு, ஓக. 3
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய அடுத்த மாதம் 2ஆம் திகதி »11

பருத்தித்துறையில்

### மோ.சைக்கிள் திருட்டு!

யாழ்., ஓக. 3
பருத்தித்துறையில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட் »11

### உழவியந்திரம் புரண்டு உயிரிழந்த இளைஞர்

முல்லைத்தீவு, ஓக. 3
உழவியந்திரம் தடம்புரண்டதில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்த நிலையில் மாஞ்சோலை மருத்துவமனையில் சேர்க்கப் »11

### பெண் பார்க்கப்போனவர் ரூபா 18 இலட்சம் இழந்தார்

நூதன மோசடி குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 3
யாழ்ப்பாணம், மானிப்பாயில் திருமணத்துக்குப் பெண்ணைப் பார்க்க வரும் இளைஞர்களிடம், வெளிநாட்டு ஆசை காட்டி அவர்களிடம் பணம் பறிக்கும் கும்பல் »11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேய்ச்சல் நிலங்களைத் தருமாறு பண்ணையாளர்கள் போராட்டம்

## மாடுகளையும் அழைத்துவந்தனர்

கிளிநொச்சி, ஓக. 3

**மேய்ச்சல் நிலங்களை வழங்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பண்ணையாளர்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்துக்காக தமது மாடுகளையும் அவர்கள் அழைத்துவந்தனர்.**



கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த பண்ணையாளர்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் அவர்கள் தெரிவித்த தாவது:

எமது கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவைகள் இல்லை. எனவே மேய்ச்சல் தரவைகளைத் தருமாறு நாங்கள் நீண்டகாலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றோம். எனினும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. விதைப்புக் காலங்களின் போதும் வறட்சியான காலங்களின் போதும் கால்நடைகள் உணவின்றிச் சிரமப்படுகின்றன.

எனவே கால்நடைகள் உற்பத்தி, பாலுற்பத்தி, இறைச்சி உற்பத்தி என்பனவற்றைக் கருத்திற்கொண்டு அதிகாரிகள் உரிய நடவடிக்கையை மேற் கொள்ளவேண்டும் - என்றனர். (ம-214.113)

## ஏழாலையில் வாள்வெட்டு: ஒருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஓக. 3

ஏழாலைப் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் கையில் காயம் ஏற்பட்ட நிலையில் ஒருவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளாரென சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இறப்பு வீடொன்றில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ச-125)

## முதியவரொருவர் சடலமாக மீட்பு!

### கொக்குவிலில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக. 3

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகில் முதியவர் ஒருவர் சடலமாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் அதேபகுதியைச் சேர்ந்த முத்துத்துரை சித்திராந்தன் (வயது-70) என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் சொந்தவீடின்றி நீண்டகாலமாக யாசகம் பெற்றுவந்த நிலையில் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் தெரிவிக்கப்படுகிறது. இறப்பு விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (ச-ரி2-27)



## மல்லாவி மருத்துவமனையில் சுவாசப் பரிசோதனைப் பிரிவு

முல்லைத்தீவு, ஓக. 3

முல்லைத்தீவு மல்லாவி ஆதார மருத்துவமனையில், சுவாசப்பை தொழிற்பாடு அளவிடும் பரிசோதனைப் பிரிவு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் பிராந்தியத்திலேயே அதிகஷ்டப் பிரதேசங்களான மல்லாவி, நட்டாங்கண்டல், ஐயங்கன்குளம், கோட்டைகட்டியகுளம் போன்ற கிராமங்கள் உள்ளடங்கலாக 47க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு ஒரேயொரு ஆதார மருத்துவமனையாக மல்லாவி மருத்துவமனை உள்ளது.

குறித்த பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் கடந்த காலங்களில் சுவாசப்பை பிரச்சினை தொடர்பிலான பரிசோதனைகளுக்காக வெளி மாவட்டங்களுக்கே சென்று பரிசோதனைகளை முன்னெடுத்தனர். இந்நிலையில் நோயாளர்களின் நலன்கருதி சுவாசப்பை தொழிற்பாட்டை அளவிடும் பரிசோதனைப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். போதனா மருத்துவமனையின் பொது மருத்துவ நிபுணர் பேராசிரியர் மருத்துவர் பேரானந்தராஜா, பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் உமாசங்கர், தெல்லிப்பழை பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் நிஷாகன் மற்றும் மல்லாவி மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் மைத்ரேயி, மல்லாவி பொது மருத்துவ நிபுணர் மருத்துவர் ருஷாந்தினி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (ச-19)

## உடைமையில் கசிப்பு: வயோதிபர் கைதானார்



யாழ்ப்பாணம், ஓக. 3

செல்வபுரம் பகுதியில் கசிப்புடன் வயோதிபர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

விசேட கண்காணிப்பு நடவடிக்கையின் போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 750 மில்லி லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளார். (ச-ரி2.125)

## போயா தினத்தில் சாராயம்: சுன்னாகத்தில் ஒருவர் கைது!

சுன்னாகம், ஓக. 3

போயா தினமான நேற்றுமுன்தினம், சாராயப் போத்தல்களைக் கொண்டுசென்ற நபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகத்தில் விசேட அதிரடிப்படையினரின் கண்காணிப்பு நடவடிக்கையின்போது, இந்தக் கைது இடம்பெற்றது. சந்தேகநபரை சட்ட நடவடிக்கைக்குட்படுத்த சுன்னாகம் பொலிஸார் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-ரி3-125)

## கசிப்புக் காய்ச்சியவர் இளவாலையில் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 3

இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயரப்புலம் பகுதியில் கசிப்புக் காய்ச்சிய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுப் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இளவாலை பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரிடமிருந்து 40 லீற்றர் கோடா மற்றும் கசிப்புக் காய்ச்சப் பயன்படுத்திய உபகரணங்கள் என்பன மீட்கப்பட்டன. (ச-ரி2-27)

## ஹெரோய்னுடன் கைதான இருவருக்கு விளக்கமறியல்



யாழ்ப்பாணம், ஓக. 3

சுன்னாகத்தில் ஹெரோய்ன் போதைப் பொருளுடன் கைதுசெய்யப்பட்ட இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. சுன்னாகம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹெரோய்ன் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடமிருந்து 1 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது.

சந்தேகநபர்கள் மேலதிக விசாரணையின் பின் மல்லாகம் நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டனர். இருவரையும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ச-125)

## வடக்கில் சீரான வானிலை

வடக்கு மாகாணத்தில் இன்று சீரான வானிலை நிலவும் என்றும் சில இடங்களில் 33 பாகை செல்சியஸ் அளவுக்கு வெப்பம் தகிக்கும் என்றும் இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது. மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என்றும் அறிவுறுத்தியுள்ளது.

## டொலரின் பெறுமதி தொடர்ந்தும் உயர்வு நிலை

கொழும்பு, ஓக. 3

ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதி தொடர்ந்தும் உயர்வு நிலையில் உள்ளது. இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட தகவல்களின் அடிப்படையில், டொலருக்கு நிகரான கொள்வனவு விலை 309.70 ரூபாவாகவும், விற்பனை விலை 322.68 ரூபாவாகவும் பதிவானது.

யூரோ ஒன்றின் கொள்வனவு விலை 338.73 ரூபாவாகவும், விற்பனை விலை 356.19 ரூபாவாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைச்சாலையில் 29,000 கைதிகள்

## கொள்ளளவைவிட இரு மடங்கு அதிகம் 60 வீதமானோர் போதைக்குற்றவாளிகள்



**கொழும்பு, ஓக. 3**

**இலங்கைச் சிறைச்சாலைகளில் தற்போது சுமார் 29 ஆயிரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளரும், மேலதிக ஆணையாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்ததாவது:

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் அண்மைக்காலமாகக் கைதிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. தற்போது சுமார் 29 ஆயிரம் கைதிகள் இலங்கைச் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். இது சிறைச்சாலைகள் கொள்ளக்கூடிய அளவை விடவும் இரு மடங்காகும். இலங்கைச் சிறைகளிலுள்ள கைதிகளில் 60 வீதமானோர் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர்கள் - என்றார். சிறைகளில் உள்ள நெரிசலைக் குறைப்பதற்காக, 20 வருடங்களுக்கும் மேலாகத் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளை புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும், கைதிகளின் உணவுத் தேவைக்காக மாதாந்தம் 5.5 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது என்றும் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச அண்மையில் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-இ)

# வரட்சிக்கு இழப்பீடு

கொழும்பு, ஓக. 3

இலங்கையில் தற்போது கடும் வரட்சியான காலநிலை நிலவுகின்ற நிலையில், ஏற்படும் பயிர்ச் சேதங்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பில் அரசாங்கம் பரிசீலித்து வருகின்றது.

ஜூலை மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் நீண்டநேரம் ஆலோசிக்கப்பட்டுள்ளது. விவசாயத்துக்கு நீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலையைக் கருத்திற்கொண்டு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்று அமைச்சர்கள் சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, நாட்டிலுள்ள அனைத்து நீரேரிகளிலும் நீரேந்து பகுதிகளிலும் தற்போது தண்ணீரின் இருப்புக் குறைந்துள்ளதால், அதைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது. (ம)

### இந்தியா - இலங்கை இடையே

# இராமர் சேது பாலத்துக்குப் பதில் புதிய நிலத் தொடர்புக்குத் திட்டம்!

### இந்திய ஊடகங்கள் தகவல்

சென்னை, ஓக. 3

இந்தியா - இலங்கைக்கு இடையிலான தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவதற்காக, இராமர் சேது பாலத்துக்குப் பதிலாகப் புதிய திட்டங்கள் விரைவில் பரிசீலிக்கப்படவுள்ளன என்று இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டார். இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான தரைவழித் தொடர்பு குறித்துத் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாகவே தற்போது இந்தியா - இலங்கைக்கு இடையிலான தரைவழித் தொடர்பை ஏற்படுத்துவதற்காக, இராமர் சேது பாலத்துக்குப் பதிலாகப் புதிய திட்டங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சேது சமுத்திரத் திட்டத்துக்கு இந்தியாவில் மத ஆர்வலர்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினார்கள். இந்தத் திட்டத்துக்கு எதிராகவே நீதிமன்றமும் தீர்ப்பளித்திருந்தது. (ம)

# ஜனாதிபதித் தேர்தலில் ரணில் பக்கமாக ஜகத்

கொழும்பு, ஓக. 3

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கலாம் என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அஸ்வெசும' நலன்புரித் திட்டத்தில் காணப்படும் குறைபாடுகளைத் திருத்திக்கொள்ள நிதியமைச்சு விசேட கவனம் செலுத்தியுள்ளது.

'அஸ்வெசும' திட்டத்தில் உள்ளடங்காத தரப்பினரிடமிருந்து கிடைக்கப்பெற்றுள்ள மேன்முறையீடுகள், முறைப்பாடுகள் ஆகியவற்றை பரிசீலனை செய்யும் வரை சமூர்த்திப் பயனாளர்களுக்கு இதுவரை காலமும் வழங்கப்பட்ட கொடுப்பனவுகளைத் தொடர்ந்து வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளமை சிறந்ததாகும்.

பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் எடுத்த ஒருசில தவறான தீர்மானங்களால் பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்தது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். பொருளாதாரப் பாதிப்புக்கு ஆட்சியில் இருந்த அரசியல் கட்சிகள் அனைத்தும் பொறுப்புக்கூற வேண்டும்.

நெருக்கடியான சூழலில்தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டு சிறந்த முறையில் அரச நிர்வாகத்தை முன்னெடுப்பாராயின் இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கலாம் என்றார். (ம)




முந்தியொருகாலத்தில கோயில் திருவிழாக்களில சின்னமேளம் கட்டாயம் இருக்கும். பேரைப் பார்த்திட்டு இது ஏதோ தவில் மாதிரி சின்னதா அடிக்கிறமேளம் எண்டு நினைச்சுப் போடாதையுங்கோ. அரைகுறை உடுப்புகளோடு, கொச்சையான வசனங்கள் பாட்டுகளோட இந்தியாவில இருந்து வாற பொம்பிளையள் ஆடுறதைத்தான் 'சின்னமேளம்' எண்டுவினம். படிப்படியா இந்தப் பழக்கம் கோயில்களில இல்லாமலே போட்டுதெண்டு நினைச்சால், இப்ப பழையபடி இந்த விளையாட்டு யாழ்ப்பாணத்துக் கோயில்களில நடக்கத் தொடங்கிட்டுது.

வடமராட்சியில உள்ள ஒரு றோட்டோரக் கோயில்ல நடந்த திருவிழாவில ஒவ்வொரு உபயகாரரும் காசை எப்பிடிக் கரியாக்கலாம் எண்டு ரூம் போட்டு யோசிச்சு, வித்தியாசம் வித்தியாசமா ஒவ்வொரு அயிட்டமா இறக்கியிருக்கினம். ஒரு திருவிழாவில யானையள் வந்தால், அடுத்தநாள் கேரள செண்டி மேளக்காரரைக் கொண்டந்து தங்கட விலாசத்தைக் காட்டியிருக்கினம். அப்பிடித் தனிய கேரள மேளக்காரரை மட்டும் கொண்டராமல் அவையின்ர மேளத்துக்கு ஆடுற சிங்களப் பொம்பிளையளையும் கோயில் வீதியில இறக்கிவிட்டதுதான் ஹைலைட்டான விசயம். இந்த 'ஆட்டக்கார' பொம்பிளையள் தான் இப்ப யாழ்ப்பாணத்தில உள்ள சில ஹொட்டல்களில நடக்கிற பார்ட்டியளில சினிமாப்பாட்டுக்கு அரைகுறை உடுப்புகளோட நெளிஞ்சு வளைஞ்சு டான்ஸ் ஆடுறவை. அப்பிடிப்பட்டவையை செண்டி மேளத்துக்கு ஆடவிட்டால் என்ன நடக்கும்? அட்டையைப் பிடிச்சு மெத்தையில விட்டாலும் செத்தைக்குள்ளதானே போகும். அதைமாதிரி இதுகளும் செண்டி மேளத்துக்கும் எல்லாத்தையும் நெளிச்சு வளைச்சு ஆட, பார்த்துக் கொண்டிருந்தவைக்குத்தான் ஒருமாதிரிப் போட்டுதாம்.

கோயில்களில 'கோஷ்டி' எண்டு சொல்லுற இசைக்குழுக்களின்ர கச்சேரியை வைக்கிறதைக் கூட, ஏதோ எங்கட ஊர்க் கலைஞர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் எண்டவகையில ஓரளவுக்கு ஏற்கலாம். ஆனால் அதுக்கும் இப்ப ஆப்பு. திருவிழாக்காரர் உள்ளூர்க் கலைஞர்களை விடவும் இந்தியாவில இருந்து சுப்பர் சிங்கர் பாட்டுக்காரர், இல்லாட்டி படங்களில பாடினவையைத்தான் இஞ்ச கொண்டந்து எழுப்பம் காட்ட நிக்கினம். அப்பிடி வாறவைக்கு எங்கட கோயில்களின்ர புனிதம் தெரியாதுதானே. அவை தங்கட ஊர் நினைப்பில குத்துப்பாட்டுகளைத்தான் கூடப் பாடிப்போட்டு போகினம். அப்பிடிக் குத்துப் பாட்டுகள் பாடேக்க கோயில் வீதியில புழுதி பறக்க, எங்கட இளசுகளும் வேட்டி அவிழ்றது கூடத் தெரியாமல் ஆடித்துலைக்குதுகள். இன்னும் சில தறுதலையள் கையில சிகரெட், பியர் போத்தில்களோடயும் இந்தக் கோஷ்டியளுக்கு வந்து றோட்டில நிண்டு ஆடுதுகள். சிலவேளை றோட்டாலை போறவாறவையோட சேட்டையும் விடுதுகள்.

கோயில் திருவிழா எண்டாலே இப்பிடி ஏதும் கன்றாவியளைப் பாக்கவேண்டி இருக்குமோ எண்ட பயத்தில வேற பாதையால போற நிலைமை வருமெண்டு ஆரும் நினைச்சிருப்பமோ?



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலைக்கழகத்தில் தமிழியல் ஆய்வு மாநாடு!

**யாழ்ப்பாணம், ஓக. 3**

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் நடத்துகின்ற நான்காவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 'சமூகக் கட்டுமானத்தில் சங்கமருவியகால அற இலக்கியங்கள்' எனும் கருப் பொருளில் எதிர்வரும் 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.**

### முதலாம்நாள் நிகழ்வுகள்

தொடக்க நாள் நிகழ்வுகள் தமிழ்த்துறைத் தலைவர் மற்றும் சிரேஷ்ட பேராசிரியர் கி.விசாகரூபன் தலைமையில் நடைபெறவுள்ளன. நிகழ்வில் வாழ்த்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராசா மற்றும் மாநாட்டின் இணைத்தலைவரும் கலைப்பீடப் பீடாதிபதியுமான பேராசிரியர் சி.ரகுராம் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

ஆசியுரையை தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினருமான கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்கவுள்ளார்.

தமிழியல் ஆய்வுமாநாட்டுக்கான திறப்புரையை சென்னைப் பல்கலைக்கழக தமிழ் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் ய.மணிகண்டன், 'தமிழில் அற இலக்கியம்: வரலாறும் பல்பரிமாணங்களும்' என்ற தலைப்பில் ஆற்றவுள்ளார்.

ஆரம்ப நிகழ்வில் தமிழுக்குப் பணியாற்றிய மூத்த பேராசிரியர்கள், பண்டிதர்கள், 10 மூத்த அண்ணாவிமார்கள் கௌரவிப்பு, பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு, பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்கிடையே நடத்தப்பட்ட தமிழறிவுப்போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்கள் கௌரவிப்பு என்பன இடம்பெறவுள்ளன. மூத்த பேராசிரியர்களுக்கான கௌரவத்தை வாழ்நாள் பேராசிரியர் சி.தில்லைநாதன், வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோரும், மரபுவழிப் புலமையாளர்களுக்கான கௌரவத்தை மட்டக்களப்பைச் சேர்ந்த பண்டிதர் தாந்திப்பிள்ளை கோபாலகிருஷ்ணன், திருமதி தனலட்சுமி மகாலிங்கம் ஆகியோரும் பெறவுள்ளனர்.

யாழ்ப்பாண அகராதியைத் தொகுத்தளித்த ந.சிறிரஞ்சன் அகராதி வல்லுநருக்கான கௌரவத்தைப் பெறவுள்ளார். அன்றையதினம் பிற்பகல் 2 மணிக்கு ஆய்வாளர்களின் ஆய்வுக் கட்டுரை அளிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்.

### இரண்டாம்நாள் நிகழ்வுகள்

இரண்டாம் நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 8ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகவுள்ளன.

முதல்நிகழ்வாக, பேச்சுப்போட்டியில் முதலிடம் பெற்ற யாழ். இந்துக்கல்லூரியைச் சேர்ந்த ஜெ.தவேதனின் பேச்சு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 'ஈழத்துப் பாரம்பரிய அரங்கு : பல்வகைமையும் பயில் முறையும்' என்ற தொனிப் பொருளில் மூத்த நாட்டுக் கூத்துக் கலைஞரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியற்றுறை விரிவுரையாளருமான வை.விஜயபாஸ்கரின் நெறியாள்கையில் அளிக்கை இடம்பெறும். இந்த அளிக்கையில் வடமாகாணத்தின் நாட்டுப்புற அரங்கைச் சேர்ந்த முன்னணிக் கலைஞர்கள் பங்கேற்கவுள்ளனர். மாநாட்டுக்கு ஆய்வாளர்கள், மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் பங்கேற்று பயனுறுமாறு ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது.

வழமைபோன்று இந்த வருடமும் யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறையால் நடத்தப்படும், தமிழியல் மாநாட்டுக்கான நிதிப்பங்களிப்பை சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசன் அறக்கொடை நிதியத்தினர் வழங்குவது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# மலையகம் - 200 பேரணி அனைவரும் கைகோர்ப்பு

மன்னார், ஓக. 3

மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி தலைமன்னாரிலிருந்து ஆரம்பிக்கப்பட்ட 'மலையகம் 200' நடைபவனி மக்கள் பேராதரவுடன் மடுவை நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சென்றடைந்துள்ளது.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையில் மலையக மக்களின் உரிமைகள் இன்னமும் மறுக்கப்பட்டே காணப்படுகின்றன. அந்தவகையில் மனிதத்தின் பெறுமதியை உறுதிசெய்யும் வகையில் இந்தப் பேரணி ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-60)

# மலையக மக்களுக்காக கிளிநொச்சியில் பேரணி

## பேரணிகள் சங்கமித்து எழுச்சி

கிளிநொச்சி, ஓக.3

மலையக மக்களின் உரிமைகளை வலியுறுத்தி முன்னெடுக்கப்படும் 'மலையக எழுச்சி' நடைபயணத்துக்கு ஆதரவு தெரிவித்து கிளிநொச்சியில் இன்று பேரணியொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம், முல்லைத்தீவில் இருந்தும் பேரணிகள் மற்றும் வாகனப் பேரணிகள் இன்று இடம்பெறும் நிலையில் இவை வவுனியாவில் சங்கமிக்கவுள்ளன.

மாண்புமிகு மலையக மக்கள் கூட்டிணைவின் ஏற்பாட்டில் தலைமன்னார் முதல் மாத்தளை வரையிலான எழுச்சிப் பயணம் ஏற்கனவே இடம்பெற்று வரும் நிலையில் அந்தப் பயணத்தை வலுப்படுத்தும் வகையில் இந்தப் பேரணிகள் அமையவுள்ளன.

பேரணிகளின் சங்கமிப்பையடுத்து, வவுனியா பல்கலைக்கழக வளாகத்திலுள்ள மண்டபத்தில் பிற்பகல் 3 மணிக்கு மலையக எழுச்சிப் பயணத்தின் நோக்கம் குறித்தும் 'மலையகம் -200' தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச-27)

# சாவ. துர்க்காதேவிக்கு இன்று கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 3

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்காதேவி ஆலய மஹோற்சவப் பெருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 13 தினங்கள் இடம்பெறவுள்ளது.

உற்சவத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி மஞ்சத் திருவிழாவும் 14ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. மஹோற்சவ குரு சிவஸ்ரீ சிவகுகநாதக்குருக்கள் தலைமையில் கிரியைகள் இடம்பெறவுள்ளன. உற்சவ காலத்தில் தினமும் மாலை 6.30 மணிமுதல் இரவு 7 மணிவரை ஸ்ரீவாணி கலைக்கூட மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ச)

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். பிள்ளைகளால் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. செலவுகள் ஏற்பட்டாலும், அதனால் மகிழ்ச்சியே ஏற்படும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம் :** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகள் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். காரியம் அனுகூலமாக முடியும். வீண் செலவுகள் ஏற்படும். மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்கும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**சிம்மம்:** சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் உதவியுடன் சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கும்.

**கன்னி:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள்.

**துலாம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். தாய்வழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். பிடிவாதப் போக்கு மன அமைதியை கெடுக்கும். அனுசரித்துச் செல்லவும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணை மூலம் எதிர்பாராத பொருள் சேர்க்கை உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது பொறுமை அவசியம்.

**மகரம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும். பொறுமை அவசியம்.

**கும்பம்:** கருத்துவேறுபாடுகள் நீங்கும். செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்பு குறையும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும்.

## யாழ். மத்திய கல்லூரியில்

# 20 % விலைக்கழிவில் புத்தகங்கள் விற்பனை!

யாழ்ப்பாணம், ஓக. 3

வடக்கு மாகாணத்துக்கான புத்தக விற்பனை நிகழ்வு தேசிய கல்வி நிறுவகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியில் நாளை 4ஆம் திகதி மற்றும் நாளைமறுதினம் 5ஆம் மற்றும் எதிர்வரும் 6ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் இந்த புத்தக விற்பனை நடைபெறவுள்ளது.

இதன்போது பாடசாலைப் பாடத்திட்டத்துக்கு அமைவான மும்மொழிகளிலான வெளியீடுகள், வள நூல்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், இறுவட்டுக்கள், செயற்பாட்டு நூல்கள், பயிற்சி நூல்கள், வினாவிடை நூல்கள் என்பன 20 வீத விலைக்கழிவில் விற்பனை செய்யப்படவுள்ளன என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## கல்வியும் சிறையும்!

இலங்கைச் சிறைச்சாலைகளில் சுமார் 29 ஆயிரம் கைதிகள் தற்போது அடைக்கப்பட்டுள்ளனர் என்று அறிக்கையிட்டிருக்கின்றது சிறைச்சாலைகள் திணைக்களம். நாடெங்கிலுமுள்ள அத்தனை சிறைச்சாலைகளிலும் 15 ஆயிரம் கைதிகளே உச்சபட்சமாக அடைக்கப்படலாம் என்றிருக்கையில், கிட்டத்தட்ட அதன் இருமடங்கான கைதிகளைக் கொண்டு நிரம்பி வழிகின்றன இலங்கைச் சிறைகள். இந்த 29 ஆயிரம் கைதிகளில் சுமார் 17 ஆயிரத்து 500 கைதிகள் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள், அவர்களில் அதிகமானவர்கள் இளையவர்கள் என்ற தகவல்களும் இந்தத் தீவின் எதிர்காலத்தை இருண்டுபோகச் செய்யுமளவுக்கு இடியாய் இறங்கியிருக்கின்றன. இவ்வாறு இளையோர் அதிகளவில் குற்றவாளிகளாக மாறுவதற்கு நம்முடைய கல்விப்புலத்தில் உள்ள குறைபாடுகளும் காரணமாகின்றன.

தமிழர் தாயகத்தில் மட்டுமல்லாமல் இலங்கையின் அனைத்துக் கிராமப்புறங்களிலும் மாணவர்கள் தம் கல்வியில் இருந்து இடைவிலகும் சந்தர்ப்பங்கள் அண்மைக் காலங்களாகச் சடுதியாக அதிகரித்திருக்கின்றன. இதனால் பல கிராமப்புறப் பாடசாலைகள் மூடப்பட்டும் உள்ளன. கல்விச் சாலைகள் மூடப்பட்டால் காட்டுமிராண்டித்தனம் மேலிடும். அது சிறைச்சாலைகளின் தேவைக்கும் – தோற்றத்துக்கும் வழிவகுக்கும் என்பது உலக நியதி. இலங்கையில் இப்போது நடந்துகொண்டிருப்பதும் அதுவே. எனவே, இந்த விடயத்தை அரசாங்கம் போர்க்கால அடிப்படையில் அணுகவேண்டும். அத்துடன் தொலைநோக்குச் சிந்தனைகளும் இதுவிடயத்தில் காலத்தேவையாகவே உள்ளன.

சிறைச்சாலைகளுக்குள் ஏற்பட்டுள்ள இடநெருக்கடியைத் தவிர்ப்பதற்காக, சுமார் 20 ஆண்டுகளுக்கும் அதிகமான காலத்தை சிறையில் செலவிட்டவர்களை விடுவித்து அவர்கள் மீது புலனாய்வுப் பார்வையைச் செலுத்துவதுதான் அரசாங்கத்தின் தற்போதைய திட்டமாக இருக்கின்றது. அன்றி, தொலைநோக்குப் பார்வைகளின் அடிப்படையில் கைதிகளின் உருவாக்கத்துக்குக் காரணம் என்ன என்பதை அலசி, அந்தக் காரணத்தை நிவர்த்தி செய்வதற்கான சமூகமட்டச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் தோல்விகண்ட அரசாங்கம், தற்போதும்கூட அந்தக் கடமைகளில் இருந்து தவறிக்கொண்டுதான் உள்ளது.

கிராமிய மட்டப் பாடசாலைகளைப் பலப்படுத்துவதும், போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தை பதின்ம வயது மாணவர்களை மையப்படுத்தி மேற்கொள்ளுவதும்தான் இளவயதுக் கைதிகளின் உருவாக்கத்தைத் தடுப்பதற்குத் தற்போதுள்ள ஆகப்பெரும் செயற்றிட்டங்களாக அமையும். ஏனெனில், இலங்கைச் சிறைகளில் இப்போதுள்ள கைதிகளில் வயது – குற்றம் – வாழ்விடம் என்பனவெல்லாம் இதைத்தான் பறைசாற்றுகின்றன. இவ்வாறான திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் கிராமியக் கல்விமுறை வளம்பெறுவதுடன் அடுத்த நூற்றாண்டுக்கான கல்விக் கட்டமைப்பை எதிர்கொள்ளவும் கிராமங்கள் தயாராகும். இது கிராமப்புறப் பாடசாலைகள் மூடப்படுவதைத் தவிர்ப்பதுடன், மாணவர்கள் இடைவிலகலையும் இல்லாமலாக்கும்.

ஆனால், இந்தத் திட்டத்தை மேற்கொள்கின்றபோது, இதற்கான நிதியொதுக்கீடு என்பதுதான் முதற் சிக்கலாகவும் பெரும் சிக்கலாகவும் அமையும். கல்விக் கட்டமைப்புத்தானே என்ற தோரணையில், கல்வி அமைச்சின் மீது இந்த ஒட்டுமொத்த நிதி மூலத்தையும் திணிக்கின்றபோது அதன் பிரதிபலன் அவ்வளவு வளம் மிக்கதாகவோ அல்லது எதிர்பார்ப்புக்கேற்றவாறோ அமையப்போவதில்லை. இப்போதிருக்கும் கல்விக் கட்டமைப்பைத் தக்கவைக்கவே நிதித் திராணியற்று இருக்கும் கல்வி அமைச்சு இவ்வாறான புதிய திட்டங்களை எவ்வாறு முன்னெடுக்கும் என்ற கேள்வி இங்கு எழுவது நியாயமானதும் தவிர்க்க முடியாததுமே. இங்குதான் கல்வி அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சு ஆகிய இரு அமைச்சுகளின் சங்கமிப்புத் தேவையாகின்றது.

சிறைக் கைதிகளின் உணவுத் தேவைக்காக மட்டும் மாதாந்தம் 5.5 பில்லியன் ரூபா சிறைச்சாலைகள் அமைச்சுக்குத் தேவைப்படுகின்றது. எனவே சிறைச்சாலைகள் அமைச்சும், கல்வி அமைச்சும் பொதுப் புரிதலின் கீழும் பொதுப் பொறிமுறையின் கீழும் ஒன்றிணையும் பட்சத்தில் கிராமப்புறக் கல்விக் கட்டமைப்பை மேம்படுத்தி அதனூடாக சிறைக்கைதிகளின் எண்ணிக்கையும் புதிய கைதிகளின் தோற்றத்தையும் சடுதியாகக் குறைக்கமுடியும். சிறைச்சாலைகள் அமைச்சு, கல்வி அமைச்சு ஆகிய இரண்டும் பார்வைக்கு வெவ்வேறானவை. நேரெதிர்த் தன்மை மிக்கவை. ஆனால், அவை இரண்டுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் ஏராளம் உள்ளன. கல்விக் கட்டமைப்பு நலிவுற்றால் சிறைகளின் தேவை பெருகும், கல்விக் கட்டமைப்பு பலம்பெற்றால் சிறைகளின் தேவை நலியும். இதை அரசாங்கம் உணர்ந்து செயற்பட்டால் கைதிகளின்பெருக்கத்தைக் குறைப்பதோடு, சிறைச்சாலைகளின் கொள்ளளவை விட அதிக கைதிகளை அடைத்து வைத்திருப்பதாக அங்கலாய்க்கவும் தேவையில்லையே.

### நாளொரு நல்வார்த்தை

" முன் நோக்கிச் செல்லும்போது பணிவாய் இரு. ஒரு வேளை, பின் நோக்கி வர நேரிட்டால் யாராவது உதவுவார்கள்.

– தந்தை பெரியார்



# ‘13’ தொடர்பில் ரணில் நாடாளுமன்றில் உரை



## அதிகாரப்பகிர்வு தொடர்பில் தெளிவுபடுத்தத் திட்டமாம்

கொழும்பு, ஓக. 3

**அரசமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார். வழங்கப்படக்கூடிய அதிகாரப் பகிர்வு தொடர்பிலும் இதன்போது அவர் கருத்துத் தெரிவிக்கவுள்ளார்.**

ஜனாதிபதி ரணிலின் இந்தியப் பயணத்துக்கு முன்பாகவும், அதன் பின்னரும்கூட 13ஆவது அரசமைப்புத் தொடர்பில் பல்வேறுபட்ட நடவடிக்கைகள் அவரால் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாகத் தமிழ்க் கட்சிகளுடன் இது தொடர்பில் பேச்சும் இடம்பெற்றது. இந்த நிலையில், 13 தொடர்பான தனது திட்டங்களை நாடாளுமன்றத்தில் முன்வைத்து, தமிழர்களுக்கு வழங்கப்படக்கூடிய அதிகாரப் பகிர்வு தொடர்பில் தெளிவூட்டலை ஜனாதிபதி ரணில் முன்வைக்கவுள்ளார். 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதன் ஊடாக தமிழ் மக்களின் அபிலாஷைகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றும் என எதிர்பார்ப்பதாக இந்தியப் பிரதமர் மோடி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய விஜயத்தின்போது புதுடில்லியில் வைத்துத் தெரிவித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)

## இ.போ.ச. சாரதிகளுடைய குற்றங்கள் ஆவணமாகும்!

கொழும்பு, ஓக. 3

இலங்கைப் போக்குவரத்துச்சபை சாரதிகளால் இழைக்கப்படும் தவறுகளை ஆவணப்படுத்தும் திட்டத்தை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. விபத்துகளைத் தடுத்து, பாதுகாப்பான போக்குவரத்தை ஊக்குவிக்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. அண்மைக் காலங்களில் இலங்கைப் போக்குவரத்துச்சபை பேருந்துகள் விபத்துக்குள்ளாகின்றமையை அடுத்தே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 218 பேருந்துகள் விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது. (ம)

## நிதி அமைச்சுக்குக் கீழ் இரு அரச நிறுவனங்கள்

கொழும்பு, ஓக. 3

இரண்டு அரச நிறுவனங்கள் நிதி, பொருளாதார உறுதிப்பாடுகள் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதற்கான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

‘சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிற்றெட்’ மற்றும் ‘தேசிய இயந்திர உபகரண நிறுவனம்’ ஆகியனவே இவ்வாறு நிதி அமைச்சின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.

‘சஹஸ்யா இன்வெஸ்ட்மென்ட் லிமிற்றெட்’ இதற்கு முன்னர் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழும் தேசிய இயந்திர உபகரண நிறுவனம் முன்னர் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழும் செயற்பட்டன. (ம)

**நாளை** 04.08.2023 வெள்ளிக்கிழமை ஆடி 19

சுபநேரம் : 06.04 – 07.34
ராகுகாலம் : 10.34 – 12.04

சங்கடஹர சதுர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச விசாரணையே நீதியைப் பெற்றுத் தரும்

## வெளிநாட்டுத் தூதுவர்களிடம் உறவுகள் இவ்வாறு வலியுறுத்து

**யாழ்ப்பாணம், ஓக. 3**

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களுக்கும், காணாமலாக்கப்பட்ட விவகாரத்துக்கும் சர்வதேச விசாரணையே நீதியைப் பெற்றுத்தரும் என்று வெளிநாட்டுத் தூதுவர்களிடம் காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.**

வடக்கு- கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வெளிநாட்டுத் தூதுவர்களை கொழும்பில் நேற்றுமுன்தினம் சந்தித்து தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

உறவுகளைத் தேடி நீண்டகாலமாகப் போராடிவரும் நாங்கள் சர்வதேச விசாரணையையே கோருகின்றோம்.

ஆனால் இலங்கை அரசாங்கம் அத்தகைய நிலைப்பாட்டில் இல்லை. உள்ளகப் பொறிமுறைகளிலும் அது தொடர்பான விசாரணைகளிலும் எமக்கு நம்பிக்கை இல்லை. ஆதலால், பாதிக்கப்பட்ட தரப்பான எங்களின் சர்வதேச விசாரணை தொடர்பான வலியுறுத்தலை நிறைவேற்ற வேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-19)

# கடலாமை கடத்திய நபரொருவர் கைது!

மன்னார், ஓக. 3

மன்னாரில் வாகனத்தில் மறைத்துக் கொண்டு செல்லப்பட்ட கடலாமை உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. அதனைக் கடத்திய குற்றச்சாட்டில் வாகனத்தின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு நேற்று கிடைத்த தகவலுக்கமைய சந்தேகத்துக்கிடமான வாகனத்தை மறித்துச் சோதனையிட்டபோது சுமார் 150 கிலோ கிராம் எடை கொண்ட கடலாமை மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட கடலாமையை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக வனஉயிரிகள் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சந்தேகநபர் சட்டநடவடிக்கைக்குட்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-213)

# உடுவில் பிரதேசத்தில் கண்புரையாளர் தெரிவு

யாழ்ப்பாணம், ஓக. 3

உடுவில் பிரதேசத்தில் கண்புரை சத்திர சிகிச்சை செய்ய வேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண்பரிசோதனை முகாம்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

காலை 9 மணிதொடக்கம் நண்பகல் 12 மணிவரை பிரதி சனிக்கிழமைகளில் மேற்படி பிரதேசத்தின் பல பகுதிகளில் இந்த முகாம்கள் இடம்பெறவுள்ளன.

அதன்படி எதிர்வரும் 5ஆம் திகதி சுன்னாகம் மின்சார நிலைய வீதியிலுள்ள சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையிலும், எதிர்வரும் 12ஆம் திகதி இணுவில் ஆரம்ப சுகாதார நிலையத்திலும், எதிர்வரும் 19ஆம் திகதி உடுவில் ஆலடி ஆரம்ப சுகாதார நிலையத்திலும், எதிர்வரும் 26ஆம் திகதி ஏழாலை ஆரம்ப சுகாதார நிலையத்திலும் கண்பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன என உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார். (ச-100)



# ஊடகவியலாளர் நிலக்சனுக்கு யாழ்ப்பாணத்தில் அஞ்சலிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 3

சுட்டுக்கொல்லப்பட்ட ஊடகவியலாளர் சகாதேவன் நிலக்சனின் 16ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

நிகழ்வில், ஊடகவியலாளர் நிலக்சனின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து மலர் தூவி, சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிலக்சனின் பெற்றோர், உறவினர்கள், நண்பர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நிலக்சன் 2007ஆம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி தனது வீட்டில் இருந்த சந்தர்ப்பத்தில் அதிகாலை 5 மணியளவில் ஆயுததாரிகள் நிலக்சனை வெளியே அழைத்து துப்பாக்கிச்சூடு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-27,20)

# Kelsey Developments Experiences Growth Spurt Followign Blue Ocena Acquisition

## Blue Ocena கையகப்படுத்துதலைத் தொடர்ந்து வளர்ச்சியை எதிர்கொள்ளும் Kelsey Developments

Blue Ocean GROUP OF COMPANIES

20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS

KELSEY HOMES 40 Years Housing Excellence

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

புகழ் பெற்ற ரியல் எஸ்டேட் நிறுவனமான lue Ocena Group of Compaiens, Kelsey Developments PLC அதன் சமீபத்தேய கையகப்படுத்துதலுடன் வீடமைப்புச் சந்தையை விரிவுபடுத்தும் நோக்கத்தை அண்மித்துள்ளது.

200க்கும் அதிகமான திட்டங்கள் மற்றும் விசுவாசமான வாடிக்கையாளர் தளத்தை 40 ஆண்டுகளாகக் கொண்டுள்ள Kelsey Developments PLC ரியல் எஸ்டேட் துறையில் தன்னை நன்கு நிலைப்படுத்திக் கொண்ட நிறுவனமாகும். இந்த கையகப்படுத்தல் இரண்டு நிறுவனங்களுக்கும் ஒரு குறிப்பிடத்தக்க மைல் கல்லைக் குறிக்கின்றது. ஏனெனில், இது சந்தையில் Blue Ocena ன் இருப்பை மேலும் வலுப்படுத்துகின்றது. அதே நேரத்தில் முநடளநல க்கும் வளர்ச்சி மற்றும் இலாபத்துக்கான புதிய வாய்ப்புகளை வழங்குகின்றது.

Kelsey Developments PLC இன் நவீன தொழில்நுட்ப திட்டம், The Central Park ஜாஎல திட்டம்; ஜாஎல மையப்பகுதியில் 300 வீட்டு வசதிகளுடன் 15 ஏக்கர் நிலப்பரப்பில், ஈடு இணையற்ற சேவைகள் மற்றும் 40க்கு மேற்பட்ட வசதிகளை வழங்குகின்றது. இதில் ஒரு முழுமையான உடற்பயிற்சி கூடம், வெளிப்புற நீச்சல் தடாகம், கிளப் ஹவுஸ், தோட்டப்பகுதிகள், ஒரு தடாகம், நடைப்பயிற்சிக்கான இடம் என்பன அடங்குகின்றன. யோகா ஸ்டுடியோ, ஒரு பகல் நேர பராமரிப்பு மையம் (Day Care Center), குழந்தைகள் விளையாடும் பகுதி, ஒரு பல்பொருள் அங்காடி, ஒரு சிற்றுண்டிச்சாலை (Caf) என்பவற்றுடன் சாரதிகள் மற்றும் பணிப்பெண்கள் தங்கும் அறைகள் என்பன அமைதியான மற்றும் அழகான சூழ்நிலைகளுக்கு மத்தியில் அமைந்துள்ளன.

Central Park கின் உத்வேகமானது, வேகமான உலகில் தங்கள் சொந்தக் கதைகளை உருவாக்க குடும்பங்களுக்கு வாய்ப்பை வழங்கும் நோக்கத்திலிருந்து பெறப்பட்டது.

Blue Ocena குழுமத்தின் கையகப்படுத்துதலுடன் Kelsey யின் அதிர்ஷ்டம் ஒரு நேர்மறையான திருப்பத்தை எடுத்துள்ளது. இந்த சாதனையானது Blue Ocena குழுமத்தின் மூலோபாயப் பார்வை மற்றும் நிபுணத்துவத்தைப் பிரதிபலிக்கின்றது. இது Kelsey யின் செயற்பாடுகள் புத்துயிர் பெற அதன் அனுபவத்தையும் வளங்களையும் வெற்றிகரமாகப் பயன்படுத்தியுள்ளது. Blue Ocena குழுமத்தால் வழங்கப்பட்ட மூலோபாய வழிகாட்டல் வளங்கள் மற்றும் சந்தை நிபுணத்துவம் ஆகியவற்றிற்கும் இது காரணமாக இருக்கலாம். Blue Ocena Group, Kelsey யின் செயற்பாடுகளை வெற்றிகரமாகப் புதுப்பித்துள்ளது. இதன் விளைவாக மேம்பட்ட நிதிச் செயற்றிறன் உருவாகியுள்ளது.

கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள Kelsey Developments PLC, அதன் 40 ஆண்டு கால வரலாற்றில் இலங்கையின் முதன்மையான வீட்டு வசதி மேம்பாட்டாளராக உருவெடுத்துள்ளது. 200க்கும் மேற்பட்ட ரியல் எஸ்டேட் மற்றும் வீட்டுத் திட்டங்களின் பரந்த முதலீட்டுடன் Kelsey Homes Gated housign மேம்பாடுகள் மற்றும் சொகுசு வாழ்க்கை அனுபவங்களுக்கு ஏற்புடையதாக மாறியுள்ளது.

கல்கிசையில் Templers சதுக்கம், River Side சொகுசு பங்களாக்கள், Vander vet வில்லாக்கள் நீர்கொழும்பு, நகர்ப்புற நுழைவாயில் (Urban Gateway) கொட்டாவ, அர்பன் ஹைட்ஸ் வத்தளை, Central Park Jaela மற்றும் Kelsey.. அதி சொகுசு தொடர்மாடி, நுகேகொடையில் உயரும் அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டம் உள்ளிட்ட வெற்றிகரமாக முடிக்கப்பட்ட திட்டங்களில் நிறுவனத்தின் சிறப்பான அர்ப்பணிப்புத் தன்மையைக் காணமுடியும்.

Kelsey Developments அதன் கவர்ச்சிகரமான சாதனையுடன், நிறுவனத்தை மேலும் உயர்ந்த தரத்திற்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான தூரநோக்கு மற்றும் நிபுணத்துவம் கொண்ட தொழில் வல்லுநர்களைக் கொண்டு அதன் இயக்குநர் குழுவைப் புதுப்பித்து அதன் தலைமைக் குழுவை வலுப்படுத்தியுள்ளது.

குழுமத் தலைவரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. சிவராஜா துமிலன் அவர்களின் தலைமையில் நிறைவேற்றுப் பணிப்பாளர்களான திருமதி சுரனி துமிலன் மற்றும் திரு நாமல் கொடல்லவத்தகே மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளர் அல்லாத திரு. பிரகாஷ் ஷாப்டர், திரு. சரவணன் நீலகண்டன், திரு. பிரட்லி எமர்சன், வசந்த கலகொட ஆகியோர் ரியல் எஸ்டேட் சந்தையின் சிக்கலான இயக்கவியலை வழிநடத்தவும் மற்றும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் நன்கு தத்தமது பங்களிப்புக்களை நல்கி வருகின்றனர். Blue Ocena குழுமமானது, சிறந்த தொழின்முறை மற்றும் வணிகத் தலைவரான சிவராஜா துமிலனால் நிறுவப்பட்டது. நன்கு சமநிலையான முதலீட்டுத் திட்டத்துடன் ஒரு முன்னணி ரியல் எஸ்டேட் குழுமமாகத் தற்போது அது செயற்பட்டு வருகின்றது. இந்த மூலோபாய நடவடிக்கையானது சந்தையில் அதன் செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கும் அதன் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி Kelsey யின் செயற்பாடுகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்குமான Blue Ocena இன் அர்ப்பணிப்பை நிரூபிக்கின்றது.

KELSEY HOMES

40 Years Housing Excellence

இக்குழுமமானது வடிவமைப்பு, கட்டுமானம், திட்ட மேலாண்மை மற்றும் நிலையான சொத்து முதலீட்டுத் தீர்வுகள் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்றுள்ளது. மேலும் அதன் பல்வேறு திட்டங்களான Likn Engienerign, Blue Ocena வீட்டுத் திட்டங்கள், Likn Readylx, Contessa, Blue Ocena Travels, Blue Ocena Appliances, Blue Ocena Facility Management, Sisira Engienerign, KBBS பல்கலைக்கழகம் என்பன்வும் இக்குழுமத்தில் அடங்கும்.

Blue Ocena குழுமத்தால் Kelsey Development கையகப்படுத்துவதனூடாக இரு நிறுவனங்களின் வளர்ச்சித் திறனை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல் Kelsey க்கான புதிய சகாப்தத்தின் தொடக்கத்தையும் குறிக்கின்றது. இந்த இரண்டு தொழிற்துறைத் தலைவர்களுக்கிடையிலான ஒத்துழைப்பு, இலங்கையின் ரியல் எஸ்டேட் துறையின் அபிவிருத்திக்கும் அது சிறந்து விளங்குவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பும் இத்துறையில் பிரகாசமான வாய்ப்புகளுக்கு ஒரு சான்றாக விளங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 08 . 09 . 1935

இறைவன் அடியில் 18 . 07 . 2019


## வீரகத்தி கணபதிப்பிள்ளை

கணப் பொழுதும் எண்ணவில்லை எம் கலங்கரை – விளக்கே!
நீங்கள் இமைப்பொழுதில் எம்மை விட்டு அகல்வீரென
அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வழிநடத்திய
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
நீங்கள் இல்லாத உலகம் என்றும் இருள் மயமானது
எங்கே காண்போம் உங்கள் மலர்ந்த முகத்தை
உங்கள் பிரிவைத் தாங்குமா எங்கள் இதயம்...
ஒவ்வொரு நொடியிலும் இதயத் துடிப்பைப் போல
உணர்கின்றோம்...
நீங்கள் கடந்து சென்றாலும் எங்கள் அருகில் – நீங்கள்
இருப்பதை நாங்கள் உணர்கின்றோம்.

குடும்பத்தினர்
காண்டீபராஜா - 077 360 4014
ஐங்கரன், சேகரன்.

இல. 42, பொன்னார் ஒழுங்கை,
மீசாலை மேற்கு, மீசாலை.

# மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 12 . 1981

மறைவு 01 . 08 . 2023

## திரு. நடராஜா நந்தகுமார்

(பிரபல தவில் இளவரசன்)

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. நடராஜா நந்தகுமார் நேற்று முன்தினம் (01.08.2023) செவ்வாய்க்கிழமை லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் தவில் கச்சேரிக்குச் சென்றவேளை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அவரது ரசிகப் பெருமக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/51499)AH-1

077 385 8010

# மரண அறிவித்தல்



பிறப்பு 02 . 10 . 1975

இறப்பு 30 . 07 . 2023

## திரு. சின்னத்துரை மதிவண்ணன்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சின்னத்துரை மதிவண்ணன் கடந்த (30.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை பூபதி தம்பதியரின் அன்பு மகனும், தவராணி - காண்டீபன் (ஜேர்மனி), சிவரஞ்சிதம் - செல்வநாயகம் (கொழும்பு), கலைவாணி - சத்தியானந்தன் (லண்டன்), கலைமகள் - நிமலசிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தம்பியும், சுதர்சிகா, தரணிகா, சரண்யா, சாருஜன், தாரபி, வசீகா, நிதர்சனா, கீர்த்திக் ஆகியோரின் அன்பு மாமனும், ஜரா, யாழன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைக்கால் இந்து மயானதிற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இணுவில் மேற்கு,
இரகுபதி வீதி.

தகவல்:
குடும்பத்தினர்

(cs 25760) (N.1)

# மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 08 . 1947

மறைவு 01 . 08 . 2023

## திரு. இரத்தினம் சோதிநாதன்

கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு கருவப்புலம் வீதி, 5ம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சோதிநாதன் கடந்த 01.08.2023 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம் சிவமணி தம்பதியரின் மூத்த மகனும், கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்லத்துரை சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மினி (கனடா), பத்மினி (பிரான்ஸ்), ராஜினி (மாவட்ட விவசாயத் திணைக்களம், யாழ்ப்பாணம்), செந்தில்குமரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், கோணேஸ்வரன் (கனடா), சுசீலன் (பிரான்ஸ்), விஜயரூபன் (மாவட்ட நீதிவான் நீதிமன்றம், ஊர்காவற்றுறை), சுமணா ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருத்திகன் சந்தோஸ், அஸ்விகா, ஜஸ்மிதன் ஆகியோரின் அன்புப் பேரனும், பிரேமநாதன், சிவநாதன், காலஞ்சென்ற சர்வலோகநாதன், விமலநாதன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பேரின்பநாதன் ஆகியோரின் சகோதரரும், மகேஸ்வரி, விஜயமலர், இரத்தினபூபதி, உதயரஞ்சினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 257658) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங் சான் சூச்சிக்கு தண்டனைக்குறைப்பு

நைபிட்டோவ், ஓக. 3

மியான்மரின் முன்னாள் ஆட்சியாளரும் அமைதிக்கான நோபல் பரிசு வென்றவருமான ஆங் சான் சூச்சிக்கு, அந்த நாட்டின் இராணுவ ஆட்சியாளர்களால் தண்டனைக் குறைப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டு மியான்மரில் தேசிய ஜனநாயகக் கட்சியின் ஆட்சி கலைக்கப்பட்டு இராணுவ ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. இதையடுத்து இரண்டரை ஆண்டுகளுக்கு அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டதுடன், சூச்சிக்கு எதிராக சுமார் 20 வழக்குகள் தொடரப்பட்டன. இந்த வழக்குகள் சிலவற்றின் விசாரணைகள் நிறைவடைந்து சூச்சிக்கு 33 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் 5 வழக்குகளில் இருந்து இராணுவ ஆட்சியாளர்களால் சூச்சி விடுவிக்கப்பட்டுள்ளார். அத்துடன் 33 ஆண்டுகால சிறைத்தண்டனை 27 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் சூச்சி வீட்டுச் சிறைக்கு மாற்றப்பட்டாரென்பதும் குறிப்பிடத்தக்கது. (ம)


## தேவை

கொக்குவில் பகுதியில் அமைதியான சூழலில் இரண்டு அறை உள்ள வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 071 533 1889

## பணியாளர் தேவை

மிக்சர் தொழிற்சாலைக்கு பெண் பணியாளர்கள் தேவை.

தொடர்பு: 076 5830 277

## விற்பனைக்கு

பிரத்தியேக வகுப்புக்கள் நடத்துவதற்குரிய மேசை, வாங்குகள் விற்பனைக்கு உள்ளது.

070 780 8751

(CS25761)AH-1

## வேலையாள் தேவை

அலுவலக பராமரிப்பும் சிறு அளவில் சமையல் செய்யக்கூடியவரும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 074 063 8216

## தவறவிடப்பட்டுள்ளது

நல்லூர் பின்வீதியூடாக கோண்டாவில் மேற்கு வரை பயணிக்கும் வீதியில் **சுதர்ஜினி சுப்பிரமணியம்** என்பவரின் **அடையாள அட்டை,** Bank Card என்பன தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

074 135 9633, 077 4666031

## குடியிருப்பதற்கு Anex தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 94 வயது நடமாடக் கூடிய ஆண் ஒருவருக்கு மூன்று நேர (சைவ) சாப்பாட்டுடன் குடியிருப்பதற்கு Anex ஒன்று யாழ் K.K.S பிரதான வீதிக்கு அருகாமையில் மல்லாகம், தெல்லிப்பளை, மாவிட்டபுரம், K.K.S. ஆகிய இடங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது. (C551505) (AH-1)

077 295 2365


## அனைத்து விடயங்களிலும்

# இந்தியாவுடன் பேச பாகிஸ்தான் தயார்!

இஸ்லாமபாத், ஓக. 3

நிலுவையிலுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இந்தியாவுடன் பேச்சு நடத்தத் தயார் என்று பாகிஸ்தானின் பிரதமர் ஷபாஸ் ஷெரீப் தெரிவித்தார். அத்துடன் அமெரிக்காவுடன் நெருக்கமாகப் பணியாற்றவும் அவர் தனது விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:அனைத்துத் தீவிரமான மற்றும் நிலுவையில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந்தியாவுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறோம். அர்த்தமுள்ள விவாதங்கள் மூலம் எமது தீவிரமான பிரச்சினைகள் புரிந்து கொள்ளப்படாவிட்டால் அண்டை நாட்டுடன் நட்பாக இருக்க முடியாது. இதை அண்டை நாடுகளும் புரிந்து கொள்வது முக்கியம். பாகிஸ்தானின் அணு சக்தி, தற்காப்பு நோக்கத்துக்காகவே உள்ளது. அது ஆக்கிரமிப்புக்காக அல்ல. ஏனென்றால் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தியதால் என்ன நடந்தது என் பதைச் சொல்ல யார் வாழ்வார்கள்? எனவே போர் ஒரு விருப்பமல்ல.

கடந்த 75 ஆண்டுகளில் பாகிஸ்தான் மூன்று போர்களை நடத்தியுள்ளது. இதன் காரணமாக பொருளாதார இழப்பு மற்றும் வளங்கள் பற்றாக்குறை ஏற்பட்டது. நாங்கள் அமெரிக்காவுடன் இணைந்துபணியாற்றவிரும்புகிறோம். பரஸ்பர மரியாதை, நம்பிக்கையின் அடிப்படையில் அமெரிக்காவுடன் சிறந்த உறவுகளை வைத்திருக்க விரும்புகிறோம். நாங்கள் ஒருவரையொருவர் ஏமாற்ற முயற்சிக்கமாட்டோம் என்றார்.

இலங்கையைப் போன்று பாகிஸ்தானும் அண்மைக்காலமாகக் கடும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது. சீனாவின் கடனுதவிகளும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளும் தான் தற்போது பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிக்கான தற்காலிகத் தீர்வாக மாறியுள்ளன. எனவே பொருளாதாரத்தைப் பலப்படுத்த பாகிஸ்தான் பல்வேறு புதுப்புது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமைகுறிப்பிடத்தக்கது. (ம)

# பூகோளக் கொதிநிலை ஈரானில் விடுமுறை!



தெஹ்ரோன், ஓக. 3

பூகோளக் கொதிநிலை காரணமாக, ஈரானில் இரண்டு நாள்கள் அரச விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் சிறுவர்களுக்கும், வயதானவர்களுக்கும் பல்வேறுபட்ட சுகாதார நடைமுறைகளும் ஈரான் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஈரானில் உச்சபட்ச அளவாக 52 செல்சியஸ் வெப்பநிலை பல நகரங்களில் பதிவாகியுள்ளது. இதை 'மனிதனால் எதிர்கொள்ள முடியாத நிலை' என்று ஈரானிய சுகாதாரத்துறை அறிவித்துள்ளது. இதன் தொடர்ச்சியாகவே அங்கு இரு நாள்கள் விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

## கேள்வி அறிவித்தல்

### சபை நிதி , மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மற்றும் கூட்டிணைந்த சமூகப்பொறுப்பு நிதி வேலைத்திட்டங்கள்- 2023

### பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

1. பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் சபை நிதி, மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை மற்றும் கூட்டிணைந்த சமூகப்பொறுப்பு நிதிகளின் ஒரு பகுதி குறித்த வேலைத்திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு. வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும். அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சீடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
5. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037, தொலைநகல் 021-205-0036 ,E-Mail: pallaips@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் 14.00 மணி வரை 03.08.2023 ஆம் திகதியிலிருந்து 15.08.2023 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் இடத்திலிருந்து 03.08.2023ஆம் திகதியிலிருந்து 15.08.2023 ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை 09.00 மணிக்கும் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000/- (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
8. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை** எனும் முகவரிக்கு 16.08.2023 திகதி மாலை 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | நிதி மூலம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/cf/tend/05/2023 | Improvement works of segregation shed for dumping ground at puloppalai- Pallai | Council | 1.48 Mn | 45 நாட்கள் | C9 and C8 | 15,000.00 | 01.11.2023 |
| NP/14/45(3)/PL/cf/tend/07/2023 | Improvement work (ground floor) & Construction work (upper floor) – Stage I for iththavil library building at iththavil- Pallai | Council | 2.40 Mn | 60 நாட்கள் | C9,C8 and C7 | 25,000.00 | 15.11.2023 |
| NP/14/45(3)/PL/cf/tend/08/2023 | Renovation work for common hall at pallai town. | Council | 0.87 Mn | 30 நாட்கள் | C9 and C8 | 10,000.00 | 01.11.2023 |
| NP/14/45(3)/PL/CSR/W/01/2023 | Construction of uoorvanikanpattu muththumari amman road-Stage II | CSR | 4.70 Mn | 60 நாட்கள் | C9, C8 and C7 | 50,000.00 | 15.11.2023 |
| NP/14/45(3)/PL/PSDG/W/03/2023 | Construction of cemetery at Thenavil at Pallai | PSDG | 2.26 Mn | 60 நாட்கள் | C9, C8 and C7 | 25,000.00 | 15.11.2023 |

10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 09.08.2023 திகதி காலை 10.30 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்துகொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.
11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாக அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தயானந்தன் தர்சினி**
**செயலாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,**
**பளை.**

(CR/40345)AH-1

**03.08.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோதனைச் சாவடி அருகில் ஆணின்சடலம் நேற்று மீட்பு

மன்னார், ஓக. 3

மன்னார் பிரதான பாலத்தடியிலுள்ள இராணுவச்சோதனைச் சாவடிக்கு சற்றுத் தொலைவில் ஆண் ஒருவரின் சடலம் நேற்றுமாலை கரை ஒதுங்கியது. சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை.

(அ-ஒ-213)

### விவசாயமா?...

அமைச்சரவையில் ஆராயப்பட்டுள்ள தாகவும் விளையாட்டு, இளைஞர் விவகார மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போது வறட்சியான காலநிலை நிலவுகின்ற பிரதேசங்களில் விவசாயத்துக்குத் தேவையான நீரை நீர்த்தேக்கங்களிலிருந்து விடுவித்தல் தொடர்பில் பல்வேறு சிக்கல்கள் தோன்றியுள்ளன. குறிப்பிட்ட சில நீர்த்தேக்கங்களில் இருந்து நீரை விடுவிக்கும்போது அது மின் உற்பத்தியைப் பாதிக்கும்.

அவ்வாறு நீரை விடுவிப்பதன் மூலம் மின் உற்பத்தி வீழ்ச்சி அடைந்தால் நாட்டில் மின் வெட்டை நடைமுறைப்படுத்த வேண்டிய நிலை தோன்றும் சாத்தியம் இருக்கின்றது. விவசாயம் மற்றும் மின் உற்பத்தி என்ற இரண்டு விடயங்களும் பாதிக்காத வகையில் இந்தச் சிக்கலைத் தீர்க்க முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

இது குறித்து அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதுடன், அங்கு மின்சாரத்தை துண்டிக்காத வேலைத்திட்டத்துக்கு நாம் செல்ல வேண்டும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டது - என்றார்.

(அ-ஒ-இ)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 05 . 05 . 1937 — மறைவு 26 . 07 . 2021

தெல்லிப்பழை, விராங்கொடை, ஞானவைரவர் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்ட

அமரர்


### இலட்சுமிப்பிள்ளை நடராசா (தவமணி)

அம்மா நீ காட்டிய வழியில்
பன்னீரில் நனைந்தார்கள்
சம்பூர் தூரத்து உறவுகள்!
ஆனால் அவர்களின் சதி வேலைகளால்
உங்களுக்கு ஏற்பட்ட வலிகள் ஏராளம் ஏராளம்
யாராலும் மறக்க மறுக்கவோ முடியாது
இன்னும் எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்கள்
அம்மா நீ தூவிய பன்னீர்
வாசமானதுதான் ஆனால் எத்தனை பேருக்குத்தான்
தெரியும் அது றோஜாவின் பன்னீரென்று
தினமும் உங்களின் கடைசி மகள்
ராகினியின் நீங்கா நினைவுகளுடன்
உங்களின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

விராங்கொடை,
தெல்லிப்பழை.

என்றும் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 23 . 08 . 1941 — மறைவு 01 . 08 . 2023

### இராமலிங்கம் மனோகரன்

(முன்னாள் முகாமைளார் RVG Ltd - கொழும்பு)

காரைநகர் கோவளம் மூக்கம்பிட்டியைப் பிறப்பிடமாகவும், இலந்தைச் சாலையை வசிப்பிடமாகவும், கொழும்பு ஆட்டுபட்டி தெருவை தற்காலிக வசிப்பிடமாகவும், காரைநகர் சம்மந்தர் கண்டியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் மனோகரன் நேற்றுமுன்தினம் (01.08.2023) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் நயினலட்சுமி தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (ஐயம்பிள்ளை மாஸ்ரர்) இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், அன்னலட்சுமியின் பாசமிகு கணவரும், அரியரட்ணம் (கனடா), ஜெயரட்டினம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், நளினியின் மாமனாரும், அர்சிகாவின் பேரனும், பரமேஸ்வரி, காலஞ்சென்ற விமலச்சந்திரன் மற்றும் சரஸ்வதி, யோகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், பார்வதி, சொக்கலிங்கம், சிவபாக்கியம், அமிர்தலிங்கம், தேவமங்கை, கருணலிங்கம், திலகவதி மற்றும் சிவமணி, சபாலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.08.2023) வெள்ளிக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

சம்மதர் கண்டி,
காரைநகர்

(N.1)

## மரண அறிவித்தல்



தோற்றம் 28 . 06 . 1966 — மறைவு 02 . 08 . 2023

### நாகலிங்கம் சிறிசத்தியநேசன்

சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியை பிறப்பிடமாகவும் பத்தமேனி அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் சிறிசத்தியநேசன் அவர்கள் நேற்று (02.08.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் மற்றும் நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், நாகராசா காலஞ்சென்ற பாக்கியம் (பூபதி) தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலலிதா அவர்களின் அன்புக் கணவரும், கஜதர்சன், நிதர்சன் (அமெரிக்கா), மதுர்சன், மதுசா, சர்மிளா ஆகியோரின் அன்புத் தந்தையும், சத்தியபாமா, சத்தியலிங்கம், சத்தியவரதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், யோகரத்தினம், மதிவதனி, கிருபாமதி, தர்மராசா, செல்வகுமார், இராசகுமாரி, சுரேஸ்குமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.08.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தீர்த்தாங்குளம் உல்லிவிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

T.P:074 078 3541

தகவல்:
குடும்பத்தினர்.

CS 25770 A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கிலாவது தேர்தலை வையுங்கள்



## இந்தியத் தூதுவரை வலியுறுத்துவேன் என்கிறார் மனோ கணேசன்

யாழ்ப்பாணம், ஓக. 3

**நாளை வெள்ளிக்கிழமை இலங்கைக்கான இந்தியத் தூதுவரை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தூதுக்குழுவினர் சந்திக்க இருக்கின்றோம். இதன் போது வடக்கு - கிழக்கில் மட்டுமாவது மாகாண சபைத்தேர்தலை நடத்துவதற்கு அழுத்தம் கொடுக்குமாறு நான் நிச்சயம் கூறுவேன் - இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்று ஊடகவியலாளர்களின் கேள்விக்கு பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் விக்கிரமசிங்கவுக்கு தேர்தல் என்றால் அலர்ஜி. உள்ளூராட்சி மன்றத் தேர்தலையும் இல்லாது ஆக்கிவிட்டார். மாகாணசபையும் இல்லை. போகின்ற போக்கைப் பார்த்தால் நாடாளுமன்றத் தேர்தலையும் ரணில் இல்லாமல் ஆக்குவார் போன்று தெரிகிறது.

ஜனாதிபதி தேர்தலை நடத்தி வெற்றி பெறலாம் என அவர் நினைக்கின்றார், அதுவரை எந்தத் தேர்தலையும் நடத்தி மக்களுடைய கருத்து வெளிப்பட்டு விடக்கூடாது என அவர் நினைக்கின்றார்.

வடக்கு - கிழக்கில் தேர்தலை நடத்தினால் அவருக்குப் பெரிய இழப்பு வரப்போவதில்லை, தென்னிலங்கையில் தேர்தலை நடத்தினால் தான் அவருக்கு எதிராக மக்கள் அணி திரண்டால் அவருடைய கனவு புஸ்வாணம் ஆகிவிடும் என அவர் நினைக்கிறார்.

வடக்கு - கிழக்கின் மக்கள் இந்த மாகாண சபைத் தேர்தலையே ஒரு பொது வாக்கெடுப்பாக அதாவது சமஷ்டியை நோக்கி நீளப்பாய்ச்சலில் பாயப் போகிறோமா? அல்லது சமஷ்டியை நோக்கி வழித்தட முகாம்களில் தங்கி அடுத்த கட்டத்துக்குப் போகப் போகின்றோமா? என்பதை முடிவு செய்யலாம்.

எனது நிலைப்பாடு இங்கே முக்கியமில்லை. நான் இரண்டையும் வடக்கு - கிழக்கு அரசியல் பரப்பிலே காண்கின்றேன். இதயபூர்வமாக நல்லது நடக்க வேண்டும் என்று விரும்புகின்றேன். இங்கே வாழுகின்ற அனைவரும் எனது இரத்தத்தின் இரத்தங்கள் தான். நான் வேறு, நீங்கள் வேறு அல்ல. அந்த எண்ணப்பாடு எனக்கு எப்போதும் இருக்கிறது. நான் நடைமுறையிலும் அதை நிறைவேற்றிக் காட்டி இருக்கிறேன் - என்றார். (அ-ஒ-27)

## கஞ்சாவுடன் 2பேர் கைது

யாழ்ப்பாணம், ஓக. 3

சுழிபுரம், காட்டுப்புலத்தில் உயிர்கொல்லி கஞ்சாவுடன் இரு இளைஞர்களை சந்தேகத்தில் வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று மதியம் கைது செய்துள்ளனர்.

25 மற்றும் 27 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்களே புலனாய்வுத் தகவலுக்கமைய 10 கிராம் உயிர்கொல்லி கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர். இருவருக்கு எதிராகவும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (அ-ஒ-125)

## ஹெரோய்னுடன் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஓக. 3

ஒரு மில்லி கிராம் உயிர்கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 25 வயதான இளைஞனை பண்ணாகத்தில் கைது செய்துள்ளதாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

பொலிஸாரின் சுற்றுக்காவல் நடவடிக்கையின்போது சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய இளைஞனை சோதனையிட்டபோதே இவ்வாறு உயிர்கொல்லி ஹெரோய்ன் மீட்கப்பட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ-ஒ-125)

கல்வியங்காட்டில்

## வர்த்தக நிலையத்தின் மீது வன்முறைக்கும்பல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 3

கல்வியங்காட்டிலிலுள்ள கடையொன்றினுள் புகுந்து மூவரடங்கிய வன்முறைக் கும்பலொன்று நேற்று இரவு 8.30 மணியளவில் தாக்குதல் நடத்தியுள்ளது.

கடையினுள் புகுந்த மூவரடங்கிய குழு கடையின் கண்ணாடிகளையும் சோடாப் போத்தல்களையும் உடைத்து கடை உரிமையாளருக்கும் காயத்தை ஏற்படுத்தி தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த வர்த்தகர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சகோதரர்களிடையேயான முரண்பாடே தாக்குதலுக்குக் காரணம் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாக கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். (அ-ஒ-125)

சட்டவிரோதக் கட்டட விவகாரம்;

## முன்னாள் தவிசாளர் மீது தாக்குதல் முயற்சி

யாழ்ப்பாணம், ஓக. 3

சட்டவிரோதக் கட்டம் தொடர்பில் ஆராய்வதற்குச் சென்ற காரைநகர் பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் க. பாலச்சந்திரன் மீது தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காரைநகர், ஆலடிச் சந்தியில் பிரதேசசபையின் அனுமதியின்றி சட்டவிரோத மீன் சந்தைக் கட்டடம் அமைக்கப்படுவதாகக் கடந்த மாதம் 30ஆம் திகதி முன்னாள் தவிசாளருக்கு கிடைக்கப்பெற்றது. இது தொடர்பான பிரதிகள் பிரதேசசபைச் செயலர் மற்றும் பொலிஸாருக்கும் வழங்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் ஆராய்வதற்காக மறுநாள் 31ஆம் திகதி காலை முன்னாள் தவிசாளர் அங்கு சென்ற போது தனிபர் ஒருவரால் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் முன்னாள் தவிசாளர் முறைப்பாடு செய்துள்ளார். அத்துடன் இது தொடர்பில் வடக்கு மாகாண பிரதம செயலரின் கவனத்துக்கும் கொண்டு சென்றுள்ளார்.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட கட்டம் தொடர்பில் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு பிரதம செயலர் பணித்துள்ளார்.

பிரதேசசபைச் செயலருக்கு உள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதக் கட்டடத்தை இடித்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பிரதம செயலர், முன்னாள் தவிசாளரிடம் உறுதியளித்துள்ளார்.

சபை நிதியில் அமைக்கப்பட்ட புதிய மீன் சந்தைக்கு மீன் வியாபாரிகள் வருவதை தவிர்த்து வருகின்றமைக்கும், குறித்த சட்டவிரோதக் கட்டடத்துக்கும் தொடர்புள்ளதாகவும், அதனாலேயே இந்தத் தாக்குதல் முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. (அ-ஒ-125)

இரட்டைக்கொலை:

## சந்தேகநபர்களுக்கு 11வரை மறியல்

### கத்தி, கோடாரி, வாள்கள் என்பன குளத்திலிருந்து மீட்பு

தோணிக்கல்லில் வீடு புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் தம்பதிகள் சாவு தொடர்பில் கைதான சந்தேகநபர்களை எதிர்வரும் 11ஆம் திகதி வரை அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

11ஆம் திகதி ஆள் அடையாள அணி வகுப்புக்காக 2ஆம் 3ஆம் 4ஆம் 5ஆம் சாட்சிகள் நீதிமன்றில் முன்னிலைபடுத்தவேண்டும் எனவும் நீதிபதியால் உத்தரவிடப்பட்டது.

இதன்போது, மன்றில் 4ஆம் சாட்சி தனது கருத்தை தெரிவிக்குமுற்பட்டபோது நீதிபதி, 11ஆம் திகதி நீங்கள் விரும்பினால் யோசித்து உங்கள் கருத்தை தெரிவிக்கலாம் என அறிவுறுத்தினார்.

தாக்குதலுக்காகப் பயன்படுத்தப்பட்ட வாள்கள் மற்றும் கோடரி, கத்தி, இரும்புக்கம்பி என்பன நீதிமன்றில் சான்றுப்பொருள்களாக ஒப்படைக்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட 5 சந்தேகநபர்களையும் வவுனியா மாவட்ட மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முன்படுத்திய பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று மாலை முற்படுத்தினர். (ஒ-18,110)

மூத்த தமிழ் ஒலிபரப்பாளர்

## விமல் சொக்கநாதன் லண்டன் விபத்தில் சாவு!

கொழும்பு, ஓக. 3

இலங்கை வானொலியிலும், பி.பி.சி. தமிழோசையிலும் அறிவிப்பாளராகப் பணியாற்றிய மூத்த தமிழ் ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன் (வயது-75) லண்டனில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

தனது வீட்டிலிருந்து நடை பயிற்சிக்காக சென்ற போது விபத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

இலங்கை வானொலியில் தனது ஊடகப் பணியை அவர் ஆரம்பித்திருந்தார். இலங்கை வானொலியிலும் பின்னர் பி.பி.சி. தமிழோசையிலும் பணிபுரிந்த விமல் சொக்கநாதன் அதன் பின்னர் ஐ.பி.சி. வானொலி ரி.ரி.என். தொலைக்காட்சி, ஜி.ரி.வி. தொலைக்காட்சி மற்றும் ஐ.பி.சி. தொலைக்காட்சி ஆகிய புலம்பெயர் ஊடகங்களில் செய்தி மற்றும் நடப்புவிவகாரத் தளத்தில் தனித்து சேவையை வழங்கியவர்.

இவர் யாழ்ப்பாணத்தில் தனது நூலை அண்மையில் வெளியிட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## அரசியல்...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே நேற்றுமுன் தினம் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இந்தச் சந்திப்பின்போது இரா.சம்பந்தனால் இந்தியத் தூதுவரிடம் கடிதம் கையளிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசியல் தீர்வு விவகாரத்தில் ஸ்தம்பித நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை - இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு 36 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது. அதிலுள்ள 13ஆவது திருத்தம் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. இந்திய - இலங்கை ஒப்பந்தமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதேவேளை 13ஆவது திருத்தத்திலுள்ள பரிந்துரைகளும் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. அரசியல் தீர்வு ஸ்தம்பிதம் அடைந்துள்ள நிலையில் இதில் கட்டாயம் மாற்றம் தேவை என வலியுறுத்தி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதியுள்ளேன். இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கும் பிரதியிட்டுள்ளேன். இந்தக் கடிதங்களை எம்மைச் சந்தித்த தூதுவர் கோபால் பாக்லேயிடம் நேற்று (நேற்றுமுன்தினம்) ஒப்படைத்திருந்தேன். இந்தியத் தூதரக அதிகாரிகள் இன்று (நேற்று) தொடர்பு கொண்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று உறுதிப்படுத்தினர்.
எமது தமிழ் மக்களுக்கு நான் சொல்லக் கூடியதெல்லாம், பொறுமையாக இருங்கள். அரசியல் தீர்வு விவகாரத்தில் மாற்றம் ஏற்படும் என்று நம்புகின்றோம்-என்றார். (அ-ஓ-5)

## தர்மபுரத்தில்...

முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. கண்டாவளை பிரதேசசெயலர் பிரிவுக்குட்பட்ட தர்மபுரம் பகுதியில் அமைந்துள்ள தும்புத் தொழிற்சாலை ஒன்றில் நேற்றுப் புதன்கிழமை திடீரென ஏற்பட்ட தீப் பரவலால் இந்த இடர் நிகழ்ந்துள்ளது.
தீப் பரவலால் 50 க்கும் மேற்பட்ட பயன் தரக்கூடிய நிலையில் இருந்த தென்னை மரங்கள் முற்று முழுதாக எரிந்து நாசமாகியுள்ளன.
வீட்டின் உரிமையாளர்கள் இல்லாத நிலையில் தும்புத் தொழிற்சாலையிலும் தொழில் நடவடிக்கை இடம்பெறாத நிலையிலேயே இந்தத் தீப் பரவல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
இதையடுத்து அந்தப்பகுதிமக்கள், இடர் முகாமைத்துவக்குழுவினர், கிளிநொச்சி தீயணைப்புப் பிரிவினர் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர். இந்தச்சம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ஓ-27-100-113)

## இலங்கையில்...

உலக தெங்கு தினத்தை முன்னிட்டு நாட்டின் இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்தை யாழ்ப்பாணம், மன்னார் மற்றும் முல்லைத்தீவு உள்ளிட்ட மாவட்டங்களை மையப்படுத்தி வடக்கில் ஆரம்பிக்கவுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் தொழில்சாலைகள் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தேங்காய் ஏற்றுமதி வருமானம் வரலாறு காணாத வகையில் அதிகரித்துள்ளது. எமது நாட்டின் தெங்கு உற்பத்தியில் காணப்படும் பல்வகைத்தன்மை காரணமாக அதற்கான கேள்வி மேலும் அதிகரித்துள்ளது. தேங்காய்ப்பால், தேங்காய்ச் சிரட்டை, கார்பன் உற்பத்திகள் ஆகியவற்றுக்கான கேள்வி அதிகரித்து வருகின்றது. இவ்வருடத்தில் தென்னை சார் உற்பத்திகள் ஊடாக 700 மில்லியன் டொலர் இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது. அடுத்த பத்தாண்டுகளுக்குள் தென்னை சார் உற்பத்திகளிலிருந்து 2 பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தைப் பெறத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, இலங்கையில் இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்தை உருவாக்க எதிர்பார்க்கப்படுகின்றது. வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த இரண்டாவது தெங்கு முக்கோணத்தை உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தெங்கு உற்பத்தியில் மூன்றில் இரண்டு பங்கு உள்நாட்டு நுகர்வுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மூன்றில் ஒரு பங்கு ஏற்றுமதிக்குப் பயன்படுத்தப்படுகிறது. இந்த நிலையை மாற்றி ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் - என்றார். (அ-ஓ-26)

## பெண்...

தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பான விசாரணைகளில் இந்த மோசடியால் பலர் பாதிக்கப்பட்டு பல இலட்சங்களைப் பறிகொடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.
யாழ்ப்பாணம், மானிப்பாயிலுள்ள பெண் ஒருவரைத் திருமணம் செய்யும் நோக்கோடு பளையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் சென்று பார்வையிட்டுள்ளார். அதன் பின்னர் பெண்ணின் சகோதரர் என்று கூறிக்கொண்டு அவுஸ்திரேலியாவிலிருந்து ஒருவர், பெண் பார்க்க வந்த இளைஞருடன் தொலைபேசியில் உரையாடத் தொடங்கியுள்ளார்.
'நீங்கள் வெளிநாடு வந்து உழைத்தால் தான் சகோதரி திருமணம் செய்வார். வெளிநாட்டுக்கு வருவதற்குநான் ஒழுங்குகள் செய்கின்றேன்' எனக்கூறி 18 இலட்சம்ரூபாபணத்தை, கிளிநொச்சியிலுள்ள பெண் ஒருவரின் வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடச் செய்துள்ளார். பளையைச் சேர்ந்த இளைஞரும் அவுஸ்திரேலியாவிலிருந்து கதைத்தவரின் பேச்சைநம்பி பணத்தை வைப்பிலிட்டுள்ளார். சில காலங்களின் பின்னர் அவர் தொடர்பைத் துண்டித்ததையடுத்து ஏமாற்றப்பட்டதை உணர்ந்து யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் மாவட்ட விசேட குற்றவிசாரணைப் பிரிவில் முறைப்பாடு செய்துள்ளார்.
விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் பணத்தை வைப்பிலிட்ட வங்கிக் கணக்குக்கு உரிமையாளரான பெண்ணைக் கைது செய்துள்ளனர். அவர் கோழிப் பண்ணை நடத்தி வருகின்றார். அவரின் வங்கிக் கணக்கை ஆய்வு செய்ததில் பல இலட்சங்களைப் பலர் இவ்வாறு வைப்பிலிடப்பட்டமை தெரியவந்துள்ளது.
இதேவேளை - மானிப்பாயில் உள்ள பெண்ணிடம் இது தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டது. அவர் தனக்கு திருமணமாகிவிட்டதாகவும், தனது சகோதரர் இவ்வாறு செய்தமை தொடர்பில் தனக்குத் தெரியாது என்றும் பளையைச் சேர்ந்த இளைஞரை தான் திருமணம் செய்ய மறுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.
வடமராட்சியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரையும் இந்தக்கும்பல் இவ்வாறு ஏமாற்றியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை முன்னெடுப்பதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-ஓ-26)

## மோ.சைக்கிள்...

டிருந்த மோட்டார் சைக்கிள் நேற்று புதன்கிழமை அதிகாலை திருடிச் செல்லப்பட்டுள்ளது.
துன்னாலை வடக்கு, போதராமடம் பகுதியில் உள்ள வீட்டில் மோட்டார் சைக்கிள் திருத்தும் தொழிலை மேற்கொண்டு வருபவரின் வீட்டில் இருந்தே மோட்டார் சைக்கிள் திருடப்பட்டுள்ளது.
புலோலியைச் சேர்ந்த நபர் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை திருத்துவதற்காக ஒப்படைத்திருந்த நிலையிலேயே அந்த மோட்டார் சைக்கிளே திருடிச் செல்லப்பட்டுள்ளது. (அ-ஓ-100)

## உழவியந்திரம்...

பட்டுள்ளனர். கொழும்பைச் சேர்ந்த 24 வயதான இளைஞரே உயிரிழந்துள்ளார். நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்து சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-
உழவியந்திரத்தை திருத்தப்பணிக்காக கொக்கிளாயிலிருந்து கொக்குத்தொடுவாய் பகுதியிலுள்ள திருத்தகத்துக்குச் சென்று மீண்டும் கொக்கிளாய் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது, கொக்குத்தொடுவாய் பாடசாலைக்கு முன்பாக வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளோடு மோதி உழவு இயந்திரம் தடம்புரண்டது.
இதிலேயே இளைஞர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார். (அ-ஓ-19)

## யாழ்...

கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் புறப்படும் முனையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணம், சங்கானைப் பிரதேசத்தில் வசிக்கும் இந்தத் தம்பதியரில் இளைஞனுக்கு 27 வயது. யுவதிக்கு 28 வயது. அபுதாபிக்குப் புறப்பட்ட விமானத்தில் பயணிப்பதற்காக இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்றுமுன்தினம் வந்தடைந்துள்ளனர்.
சந்தேகத்தின் அடிப்படையில் குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவுக்கு வரவழைக்கப்பட்டு அவர்கள் கொண்டுவந்த பயணப்பொதிகளைச் சோதனையிட்டபோது பொய்யான தகவல்களுடன் தயாரிக்கப்பட்ட இரண்டு கடவுச்சீட்டுகளும் இளைஞனிடம் இருந்த போலி விசாவும் கண்டுபிடிக்கப்பட்டது.
யுவதியின் விசா தொடர்பில் வினவிய போது அந்தப் பெண் மௌனம் காத்தமையால் குடிவரவு மற்றும் குடியகல்வு பெண் அதிகாரி வரவழைக்கப்பட்டு யுவதி உடற்சோதனைக்குட்படுத்தப்பட்டார். இதன்போது அவரது உள்ளாடையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போலி இத்தாலிய விசா கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட இரண்டு போலிக் கடவுச்சீட்டுகளின் உண்மையான உரிமையாளர்களான கொழும்பு கோட்டைப் பகுதியில் வசிக்கும் தம்பதியர் ஏற்கனவே தங்களுடைய உண்மையான கடவுச்சீட்டு மற்றும் விசாக்களைப் பயன்படுத்தி இந்த விமானத்தில் இருக்கையில் அமர்ந்திருந்தனர்.
குடிவரவு மற்றும் குடியகல்வு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட தம்பதியர் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.
வட பிராந்தியத்தில் 20 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர்கள் போலியான தகவல்கள் அடங்கிய ஆவணங்களைப் பயன்படுத்தி ஐரோப்பாவுக்குத் தப்பிச் செல்லும் போக்கு அதிகரித்து வருவதாக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-ஓ-இ)

## இரும்பைத்...

தெரிவித்தார். தொழிற்சாலைக்கு உரிய பாதுகாப்பு இல்லாததால், சுற்றுவட்டாரத்தில் வசிப்பவர்கள் தொழிற்சாலை வளாகத்துக்குள் நுழைந்து இரும்பை எடுத்துச் செல்வதாகவும், இது தொடர்பாக பலமுறை பொலிஸில் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகவும் அவர் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-
தொழிற்சாலையில் பாதுகாப்புக்காக இராணுவம் ஈடுபடுத்தப்பட்டுள்ள நிலையில், சொத்துக்கள் ஓரளவு பாதுகாக்கப்பட்டுள்ளதாகவும், வடக்கில் இராணுவத்தினரைக் குறைக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் படையினர் அகற்றப்பட்டதால், பாதுகாப்புக்கு அவர்களை ஈடுபடுத்துவதற்கு வழியில்லை. அதன் விளைவாக சில நபர்கள் தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலை வளாகத்தில் இரும்பைத் திருடுகிறார்கள். தொழிற்சாலையின் பல கட்டடங்கள் இரும்பால் கட்டப்பட்டுள்ளன. பல இலட்சம் ரூபா பெறுமதியான வளாகத்தில் அதிகளவிலான இரும்புகள் இருந்தன.
இரும்புத் திருட்டைத் தடுப்பதற்கும் பாதுகாப்புக்காகவும் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. சில சமயங்களில் இவர்களுக்கும் பிரதேசவாசிகளுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு பிரச்சினை எழுகின்றது.
இரும்பை கேள்விகோரல் மூலம் ஏலம் விடவேண்டும் என்ற நோக்கத்தில் 2019 இல் மூன்று அமைச்சகங்களின் செயலர்கள் தலைமையில் கேள்விகோரல் குழு ஏற்படுத்தப்பட்டபோதிலும், அந்த நடைமுறைகளில் இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதனால் இரும்பை வெளிப்படைத்தன்மையுடன் இருக்கும் இடத்திலிருந்து அகற்றும் பணியை துரிதப்படுத்த வேண்டும் - என்றார்.
இதேவேளை - காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை அமைந்துள்ள வளாகம் இராணுவக் கட்டுப்பாட்டினுள்ளேயே இன்னமும் உள்ளதுடன், இரும்பைத் திருடிய இராணுவத்தினர் சில சந்தர்ப்பங்களில் கைதாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ஓ-இ)

## பறாளாய்...

சித்திரித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. ஆலய வளாகத்தில் உள்ள சங்கமித்த போதியா எனப்படும் பழைய அரசமரம் உள்ளது. அதனையே தொல்லியல் சின்னமாக அறிவித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.
இதனையும் எதிர்காலத்தில் ஆக்கிரமித்து புத்தர் சிலையை அரச மரத்தின் கீழ் வைக்கலாம் என்ற அச்சம் அந்தப் பகுதி மக்களிடையேஎழுந்துள்ளது. (அ-ஓ-125)

## வல்வைப்...

வேந்தல் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை மாலை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்டது.
1989ஆம் ஆண்டுஇந்திய இராணுவத்தினரால் கொன்று குவிக்கப்பட்ட 64 தமிழர்களின் நினைவாக வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரைப் பகுதியில் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.
இந்நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலர் செல்வராஜா கஜேந்திரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர்கள், பிரதேச மக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (அ-ஓ-66-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழு மோதல் இருவர் சாவு!

காலி நியாகமை பிரதேசத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற குழுமோதலில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 34 வயதுடைய குடும்பத் தலைவர் மற்றும் 28 வயதுடைய இளைஞர் ஆகியோரே மோதலில் உயிரிழந்துள்ளனர். காதல் விவகாரத்தால் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-ரி2)

## வவுனியா கடவுச்சீட்டு அலுவலகம் சேவைகளை மட்டுப்படுத்துகின்றது

வவுனியா, ஓக. 3

வவுனியா பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தில் சேவைகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் பொதுமக்களுக்கு குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் விசேட அறிவித்தலை விடுத்துள்ளது. தற்போதுள்ள பொதுமக்களின் நெருக்கடியை குறைக்கும் வகையில் இன்று முதல் வட மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் அநுராதபுரம் மாவட்டத்தில் வசிப்பவர்களுக்கு மாத்திரம் வவுனியா பிராந்திய கடவுச்சீட்டு அலுவலகத்தில் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும் என குறித்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா கடவுச்சீட்டு அலுவலகத்தில் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் பொதுமக்கள் வருகைதருவதால் அங்கு நெருக்கடி நிலை ஏற்பட்டுவருவதுடன், பொதுமக்களுக்கிடையில் குழப்ப நிலையும் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ,110)

## மோ.சைக்கிளில் வந்தோர் அறுத்தனர் சங்கிலியை!

வவுனியா, ஓக. 3

வவுனியா, குருமன்காட்டில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், பெண் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். நேற்று இரவு 7.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

குருமன்காடு, காளிகோவிலுக்கு அருகாமையில் பெண் ஒருவர் சென்றுள்ளார். இதன்போது பல்சர் ரக மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், அந்தப்பெண் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பித்தோடினர்.

சிலர் துரத்திச்சென்றபோதும் அவர்களைப் பிடிக்க முயலவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை - நெளுக்குளத்தில் நேற்றுமுன்தினம் மோட்டார்சைக்கிளில் சென்ற இருவர் பெண் ஒருவர் அணிந்திருந்த 5 பவுண் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பிச்சென்றுள்ளனரென பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. (அ-ஓ-110)

இலங்கையில்

## இந்திய ரூபாவை பயன்படுத்த முடியாது!

### மத்திய வங்கி தெளிவுபடுத்தல்

கொழும்பு, ஓக. 3

இந்திய ரூபா இலங்கையில் செல்லுபடியாகும் நாணயம் அல்ல என மத்திய வங்கி தெரிவித்துள்ளது. நாட்டுக்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்கும் இலங்கை ரூபாவை மாத்திரமே பயன்படுத்த முடியும் என மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இந்திய ரூபா குறித்து தற்போது பரவிவரும் தவறான கருத்துகளை, தெளிவுபடுத்தும் வகையில் இலங்கை மத்திய வங்கி இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயங்களாக வங்கித் தொழில் சட்டம் மற்றும் வெளிநாட்டுச் செலாவணிச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் இந்திய ரூபாவுடன் 16 நாணயங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த 16 நாணயங்களை அங்கீகரித்ததன் முக்கியமான நோக்கம் நாடுகளுக்கிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை ஊக்குவிப்பதாகும் என மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ஓ-இ)


**வீடும் காணியும் விற்பனைக்கு**

அச்சுவேலி தோப்பு இராச வீதியில் 9 1/2 பரப்பு தோட்டக்காணியும், வீடும் விற்பனைக்குண்டு.

**பார்வையிடும் நேரம்- 6AM - 6 PM**

தொடர்புகளுக்கு:

**076 9401045, 076 159 8003, 077 8678 153**

**தேவை**

யாழ். நகரில் உள்ள போன் சொப்பிற்கு

✓ விற்பனையாளர் ✓ திருத்துநர்

✓ பழக விரும்புபவர்கள்

வயது - 18 - 21 ஆண் / பெண்

சம்பளம் - 30,000/=

**077 199 6117**

S(25762)AH-1

**பெண் வேலையாள் தேவை**

யாழில் இயங்கும் பிரபல்ய கலர்லாப் ஒன்றிற்கு வேலைக்கு பெண்கள் தேவை. முன் அனுபவம் தேவையில்லை. யாழ். நகரை அண்மித்து இருப்போர்க்கு முன்னுரிமை. தொடர்புகளுக்கு:

**077 0791 862**

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 14 • 08 • 1933

உதிர்வு 29 • 07 • 2018

**அமரர் செல்லத்துரை இராசரத்தினம் (J.P)**

**(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை)**

**திதி:- ஆடிமாத தேய்பிறை துதியை (03.08.2023)**

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர்வாழும்
மண்விட்டு நீங்கள் மறைந்து
ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
உங்கள் நினைவுகளுடன் நாள்தோறும்
நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

**75/1, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(CS51494)AH-1

**குடும்பத்தினர்.**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் **நுணாவில்** பகுதியில்

**18 பரப்புக் காணி** விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

- நுணாவில் மேற்கு சாவகச்சேரி வேறாக்கன்னி கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் உள்ளது.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீர் ஊற்று சூழல்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதியை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 14 லட்சமும் 18 அடி பாதையை முகப்பாக கொண்ட காணித் துண்டுகள் 12 லட்சம் வரையும் உள்ளது.
- **பார்வையிடும் நேரம்:** காலை 6.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை

**தொடர்புகளுக்கு - ஜெயம்**

**077 8147 389**

**077 9865 457**




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் ... இல் உள்ள அவர்களது பணிமனையில் 03.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org